## சுருக்கம்

கோயம்புத்தூர் மாநகராட்சி – ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி காலணிகள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசு ஆணை (ப) எண்.236** **நாள் : 17 .05.2010**

**படிக்கப்பட்டது:**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10670/ 2010/ மாநஅ3, நாள் 19.03.2010.

* * * * *

**ஆணை:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மேலே படிக்கப்பட்ட தமது கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் 45 ஆரம்ப மற்றும் 12 நடுநிலைப்பள்ளிகள் இயங்கி வருகின்றது என்றும் இப்பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி காலணிகள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மாமன்ற தீர்மான எண்.67, நாள்.11.09.2009–ல் அனுமதி வழங்கியுள்ளதாக கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளதாகவும், மேலும் இப்பள்ளிகளில் 9628 மாணவ, மாணவிகள் பயின்று வருவதாகவும், இந்த காலணிகள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் 1 காலணிக்கு ரூ.200/– வீதம் 9628 மாணவர்களுக்கு வழங்கினால் ஏற்படும் செலவினம் ரூ.19,25,600/–(ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறுநூறு மட்டும்) ஆகும் எனவும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சியில் நடுநிலை மற்றும் ஆரம்ப பள்ளிகளில் பயிலும் 9628 மாணவர்களுக்கு 1 ஜோடி காலணிகள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) வாங்கி வழங்க ஏற்படும் செலவினம் ரூ.19,25,600/– ஐ (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறுநூறு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளருக்கு அனுமதி வழங்கலாம் என நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட மேற்கண்ட கருத்துருவை நன்கு ஆய்வு செய்தபின் கோயம்புத்தூர் மாநகராட்சியில் வரும் கல்வி ஆண்டில் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் 1 முதல் 5 ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 1 ஜோடி காலணிகள் (Canvas Shoes) மற்றும் 2 ஜோடி காலுறைகள் (Socks) கோயம்புத்தூர் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**நிரஞ்சன்மார்டி,**
**அரசு முதன்மை செயலாளர்.**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5.
ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

<u>நகல்:</u>
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை செயலாளரின் தனிச் செயலர், சென்னை –9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.II) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்**